இவை எல்லாம் திரு. கே. டி. கே. அவர்களுக்குத் தெரியாத பிரச்சினை அல்ல. அந்தக் காலத்தில் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யார் யாரைப் பிடித்தார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். யாராவது—கே. டி. கே. ஐக் கைது செய்திருப்பார்கள். மனைவியைக் கைது செய்திருப்பார்கள். இன்றைய முதலமைச்சரைக் கைது செய்திருப்பார்கள். அன்னத்தில் பின்னம் கலப்பவர்களை—கலப்படம் செய்பவர்களை—கள்ளக்கடத்தல் செய்பவர்களை எல்லாம் கைது செய்ய வேண்டும் என்பதற்காக நாங்கள் அந்தக் காலத்திலே பல போராட்டங்களை நடத்தினோமே, அப்படி அவர்கள் ஏதாவது செய்தார்களா? அவர்களைப் பிடிப்பதற்கு அரசியல் ரீதியாக, துணிந்து அகில இந்தியாவிலேயும், அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பல பெரிய வியாபாரிகளைக் கைது செய்திருப்பது நமது அரசுதான். பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த நாங்கள் தவறிவிட்டோம் என்று சொல்வது சரியல்ல. திரு. கே. டி. கே. யைப் போன்றவர்கள் எல்லாம்—முற்போக்குக் கருத்துக்கள் கொண்டவர்கள் எல்லாம் இன்றைக்குச் செய்யவேண்டிய காரியம் இந்த அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதுதான் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தில் பின்னர் தொடர்ந்து பேசுவார்கள்.

7. அரசினர் தீர்மானம்.

தேதி குறிப்பிடாமல் பேரவையை ஒத்திவைப்பது குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த பேரவையின் அலுவல்கள் இன்றோடு முடிவடைவதால், பேரவையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இந்தக் கூட்டத்தொடர் முடிவடைகிறது. நான் பேரவையைத் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கிறேன்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.